www.newwisdomministries.com

# ஞானஒலி




## ஆமென்றால் ஆமென்றிருக்கட்டும்



ஞானம் - 6 - ஒலி 19 - 07.05.2023

# முழுமை முழுமையிலிருந்து...
# அறைகுறை அறைகுறையிலிருந்து...





## தலையங்கம்

அருட்பணி.இ.சைமன் பீட்டர்,
ஆசிரியர் – ஞான ஒலி

மதிப்பிற்குரிய ஞான ஒலி மின்னிதழின் வாசக அன்பர்களே உங்கள் அனைவருக்கும் நம் அருள்நாதர் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் என் நல்வாழ்த்துக்களைத் அன்புடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கடவுள் நம்பிக்கையாகட்டும், பிறரன்பாகட்டும், இறைப்பணியாகட்டும் அனைத்தும் முழுமையாக இருக்கட்டும் என்று இயேசு ஒரு விதியைக் கொடுத்திருக்கின்றார்.

அறைகுறையான எச்செயலும், முழுமையான பலனைத் தராது, அது வீண் வேலை, வீணர்களின் வேலை என்பதால், அதைத் தவிர்க்க வேண்டும். உண்டென்றால் உண்டு, இல்லை என்றால் இல்லை என்பதுதான் இயற்கை விதித்திருக்கும் ஒரே விதி.

எந்த ஒரு செயலும் அந்த மனிதனின் முழுமை அங்கு இருக்கவேண்டும். அந்த மனிதனின் எண்ணம், ஆசை, ஊக்கம், ஈடுபாடு, செயல்திறன், இறுதிவரைக்கும் உயிரோட்டத்துடன் இருக்கவேண்டும். அப்போதுதான் அது இறுதி வடிவம் பெறும். அந்த முயற்சியே திருவினையாக்கும். துவக்கத்தில் இருந்தது இறுதிவரை நிலைத்து நிற்பவையே விருச்ச வெற்றியைத் தரும்.

அதனால்தான் உம்பேச்சு ஆம் என்றால் ஆமென்றும், இல்லை என்றால் இல்லை என்றிருக்கட்டும் என்று இயேசு பெருமான் திட்டவட்டமாகக் கூறிச்சென்றார். –மத்தேயு 5/37 ،

சமீபத்தில் ஒரு பொன்மொழியைப் படித்தோன். அதில் வெற்றிக்கான இரண்டு விதிகள் உண்டு. அதில் முதல் விதி, எந்தக் காரணத்திற்காகவும், உன் இலச்சியத்தை விட்டுவிலகாதே, இரண்டாவது விதி முதல் விதியை எந்தக் காலத்திலும் மறந்துவிடாதே என்று சொல்லப்பட்டிருந்தது.

முன் வைத்தக்காலைப் பின் வைக்காதே என்ற நம் முன்னோர்களின் பொன்மொழிதான் நினைவுக்கு வருகின்றது.

அதுபோல கடவுளை நம்புபவர்கள், அவரை முழுமையாக நம்ப வேண்டும் என்ற முதல் விதியை மறக்கக்கூடாது என்பதற்காக இறைமகன் இயேசு இவ்வாறு கூறினார்....

இயேசு, உன் முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு மனத்தோடும் உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு செலுத்து...இதுவே தலைசிறந்த முதன்மையான கட்டளை என்றார்....மத்தேயு 22/37

ஓர் உண்மைச் சம்பவத்தை உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன். இறைநம்பிக்கையும், நற்செய்திப் பணியில் மிகுந்த ஆர்வவுமிக்க ஒரு தம்பதியினர், இதுவரை நற்செய்தி அறிவிக்கப்படாத ஒரு தீவிற்குப் போய் அங்குள்ள மக்களுக்கு முதன்முறையாக இயேசுவைப் பற்றிய நற்செய்தியை அறிவிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டனர். அவரின் பெயர் ஜான் கென்னடி. இருவரும் ஒரு கப்பலில் ஏறி

பயணம் மேற்கொண்டனர். எந்த நாடு, எந்த தீவு என்ற எந்தவித முன்யோசனையுமின்றி இலக்கில்லாமல் கப்பல் ஏறிப் பயணம் செல்கின்றனர். அந்தக் கப்பலின் கேப்டன் அவர்களைப் பார்த்து நீங்கள் எங்கு செல்ல வேண்டும்? இங்கு நிறைய தீவுகள் உண்டு அதில் எந்தத் தீவில் உங்களை இறக்கி விடவேண்டும்? என்று கேட்டார். அதற்கு எந்தத் தீவு என்று எங்களுக்குத் தெளிவில்லை, நாங்கள் இருவரும் செபம் செய்துவிட்டு அதன்பிறகு உங்களிடம் தெரிவிக்கிறோம் என்றார்கள். அவர்கள் அந்தப் பகுதியின் வரைபடத்தை விரித்து வைத்துவிட்டு இறைவனிடம் நாங்கள் எங்கு பணி செய்யச் செல்ல வேண்டும் என்பதை எங்களுக்குக் காட்டும் என்று செபித்துவிட்டு இருவரும் கண்களை மூடி தங்களின் ஆள்காட்டி விரல்களை அந்த வரைபடத்தில் ஓரிடத்தில் வைத்தார்கள். இருவருக்கும் ஆச்சர்யம், ஏனென்றால், இருவரும் ஒரே தீவின்மீதுதான் தங்கள் விரல்களை வைத்திருந்தார்கள். கேப்டனிடம் சென்று தாங்கள் அந்தக் குறிப்பிட்ட தீவில் இறங்க வேண்டும் என்று சொன்னார்கள்.

அதைக் கேட்ட கேப்டன் அதிச்சியடைந்தார். காரணம் இதுவரை அங்கு இதுவரை இறக்கிவிடப்பட்ட யாரும் நாங்கள் திரும்பி வரும்போது எங்கள் கப்பலில் ஏறியதே இல்லை. காரணம் அந்தத் தீவில் வாழ்பவர்கள் மனிதக் கறி சாப்பிடுபவர்கள் என்றார். ஆகவே, அங்கு வேண்டாம் வேறு இடத்தில் உங்களை இறக்கி விடுகின்றேன் என்று கூறினார்.

ஆனால் அந்தத் தம்பதியினர். இயேசு எங்களை இங்குதான் பணியாற்ற வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார். என்ன ஆனாலும் பரவாயில்லை எங்களை அந்தத் தீவிலே இறக்கிவிடுங்கள் என்று உறுதியாகக் கூறினார்கள். அதன்படியே அந்தத் தீவில் அவர்கள் இறங்கிக் கொண்டார்கள்.

ஆனால், அந்தக் கேப்டன் அவர்கள் மீது பரிவு கொண்டு, உங்களுக்கு ஒரு படகைக் கரையில் விட்டுச் செல்கின்றோம். ஒருவேளை உங்களுக்கு ஆபத்தென்றால் அதில் ஏறித் தப்பித்துக் கொள்ளுங்கள் என்று அவர் சொன்னபடி அவர்களுக்க ஒரு சிறிய படகை அந்தக் கரையில் கட்டிவிட்டுச் சென்றார்கள்.

அந்த கரையிலேயே ஒரு சிறிய குடிசையைக் கட்டி தோட்டமிட்டு பயிரிட்டு தங்கள் உணவுத் தேவையைத் பூர்த்தி செய்துகொண்டார்கள். அந்தப் பகுதியில் மனித நடமாட்டமேயில்லை. அந்த மனிதர்கள் அடர்ந்த காட்டுக்குள்தான் இருப்பார்கள். அங்கு போவதும் கடினம். இவர்கள் இருவரும் வயதானவர்கள். அந்த பயணமும் மிகமிகக் கடினமாயிருந்தது.

ஒரு வருடம் அவர்கள் எந்த நற்செய்திப் பணியையும் செய்ய முடியவில்லை. அவர் கடவுளிம் இறைவா, எங்களால் எந்த ஒரு பணியையும் செய்ய முடியவில்லை. நற்செய்தியை அறிவிக்க முடியவில்லை என்று செபம் செய்தார். அப்போது கடவுள் அவரிடம் பேசினார். நீ என்னை நம்பாமல் அந்த கப்பல் கேப்டனை நம்பிக் கொண்டிருக்கிறாயே என்றாராம். அதற்கு அந்த மனிதன் அப்படியில்லை, உம்மையே நாங்கள் நம்புகின்றோம் என்றதற்கு, என்மீது நம்பிக்கை வைக்காமல், நீ ஏன் அந்தச் சிறிய படகை கரையில் கட்டி வைத்திருக்கிறாய்? என்றார்.

அப்போதுதான் அவர் இயேசுவின் பராமரிப்பில் நம்பிக்கை நம்பிக்கை வைக்காது படகை நம்பிய தவறை உணர்ந்தார். உடனே அவர்கள் இருவரும், அந்தக் கரைக்குச் சென்று அந்தக் கப்பலை தீவைத்து எறித்தார்கள்.

அப்போது கப்பலிலிருந்து கரும்புகை வானைநோக்கி எழுந்தது. அப்போது அந்தக் காட்டுக்குள் வாழ்ந்த மக்கள் அனைவரும், அந்த புகை வந்த திசையை நோக்கி வந்து அந்தத் தம்பதியைப் பார்த்து யார் நீங்கள்? என்று அந்தக் கூட்டத்தின் தலைவன் கேட்டான். அதற்கு ஜான் கென்னடி அந்தப் பகுதியில் மக்கள் பேசிய மொழியை ஏற்கெனவே சிறிது கற்றிருந்தார். அவர் தன் ஆசை, பயணம், இறைப் பணிபற்றி அவரிடம் ஜான் கென்னடி எடுத்துக் கூறினார். பல சிரமங்களுக்குப்பின் அந்த ஊர்தலைவர் முதலில் இயேசுவை ஏற்றுக கொண்டார். அதன்பிறகு மக்கள் அனைவரும் இயேசுவில் நம்பிக்கை கொண்டார்களாம்.


அந்த மக்கள் பேசும் மொழியிலேயே அந்தத் தம்பதியினர் அந்த மக்களுக்கு இயேசுவைப் பற்றி மேன்மேலும் அறிவித்தார்கள். அந்த மக்களும் மிகுந்த மரியாதையோடு அவர்களைப் பராமரித்தார்கள். மனிதக் கறி சாப்பிடுபவர்கள் பிறரன்பு பேணும் மக்களினமாக மாறினார்கள்.

பல வருடங்களுக்குப் பிறகு ஜான் கென்னடி அவர்கள் இறந்தார். அவருக்கு அந்த மக்கள் கல்லறை ஒன்றைக் கட்டினார்கள். அவரது கல்லறயில் இவ்வாறு எழுதினார்களாம்.

அவர் இங்கு வந்தபோது இயேசுவை யார் ஒருவரும் அறிந்திருக்கவில்லை. அனால் அவர் இறந்தபோது இயேசுவை அறியாதவர் இந்தத் தீவில் ஒருவரும் இருக்கவில்லை என்று. முழுமையான பணி முழுமையானப் பலனைத்தான் தரும். அதுவே இறைமகிமை.

# விவிலியம் அறிவோம்





## முதல் கணக்கெடுப்பு

எண்ணிக்கை நூல் ஒரு கணக்கெடுப்புடன் தொடங்குகிறது. இருபது வயது மற்றும் அதற்கும் மேற்பட்ட போருக்குச் செல்லத்தக்க ஆண்கள் கணக்கு எடுக்கப்படுகின்றனர். கணக்கெடுப்பு பற்றிய இப்பகுதி குருக்கள் மரபிலிருந்து வருகிறது. உடன்படிக்கை நிகழ்விற்குப்பின் ஆண்டவரின் கட்டளைப்படி சீனாய் பாலைவனத்தில் தங்கியிருக்கையில் மோசே சந்திப்பு கூடாரத்தையும் அதனுள் திருஉறைவிடத்தையும் அமைத்து உடன்படிக்கைப் பேழையை அதில் வைக்கிறார். முதல் மாதத்தில், முதல் நாள், சந்திப்புக் கூடாரத்தின் திருஉறைவிடம் எழுப்பப்படுகிறது (விப 40:2). ஒரு மாதத்திற்குப் பின், இரண்டாம் மாதம், முதல் நாளன்று சந்திப்புக் கூடாரத்தில் ஆண்டவர் மோசேயிடம் பேசுகிறார். முதலாவதாக, இஸ்ரயேல் மக்கள் கூட்டமைப்பில் உள்ளவர்களில், இருபது வயதும் மற்றும் அதற்கும் மேற்பட்ட வயதுடைய ஆண்களை எண்ணிக் கணக்கெடுப்பதற்குக் கட்டளையிடுகிறார். அவர்கள் அனைவரையும் அவர்கள் குடும்பங்கள், மூதாதையர் வீடுகளின் பெயர்கள் எண்ணிக்கைப்படி தலைக்கட்டு வாரியாகக் கணக்கெடுக்க வேண்டும். ஆண்கள் இருபது வயதை அடையும்போது வளர்ச்சி அடைந்தவர்களாகக் கருதப்படுகிறார்கள். எனவே எல்லாவிதமான சமயக்கடமைகளைச் செய்வதற்கும், போரில் கலந்து கொள்வதற்கும் தகுதி பெறுகிறார்கள். இந்தக் கணக்கெடுப்பை மோசேயும் ஆரோனும் இணைந்து செய்வதற்கு ஆண்டவர் கட்டளையிடுகிறார். இந்தக் கட்டளை, இஸ்ரயேலர் எகிப்து நாட்டிலிருந்து வெளியேறிய இரண்டாம் ஆண்டு, இரண்டாம் மாதம், முதல் நாளன்று கொடுக்கப்படுகிறது. இஸ்ரயேல் மக்களுடைய வாழ்க்கையில் மைய நிகழ்வாக எகிப்திலிருந்து வெளியேறும் நிகழ்வு உள்ளது. அதுவே அவர்களுக்கு ஆண்டின் தொடக்கம். எனவே அவர்களின் வாழ்வில் வருகின்ற அனைத்து நிகழ்வுகளும் எகிப்து நாட்டிலிருந்து வெளியேறிய அந்த

நாளுடன் தொடர்பு படுத்தப்பட்டு பார்க்கப்படுகிறது.

சீனாய் மலை கடவுள் இஸ்ரயேல் மக்களுடன் உடன்படிக்கை ஏற்படுத்திய இடம். அங்கே கடவுள் அவர்களுக்குத் தன்னை வெளிப்படுத்துகிறார்; அவர்களுக்குத் திருச்சட்டங்களைக் கொடுக்கிறார்; அவர்களைத் தன் மக்களாகத் தேர்ந்தெடுக்கிறார்; குருத்துவ அரசாகவும், தூய மக்களினமாகவும் அவர்களை மாற்றுகிறார் (விப 19-24). உடன்படிக்கையைத் தொடர்ந்து கடவுள் அவர்களுடன் பயணிக்கும் விதமாக திருஉறைவிடம் கட்டுவதற்கு அறிவுரைகள் வழங்குகிறார் (விப 25-31; 35-40). திருஉறைவிடம் கடவுளின் வாழ்விடம்; இஸ்ரயேல் மக்கள் நடுவில் வாழ்வதற்குக் கடவுளால் தேர்ந்துகொள்ளப்பட்ட உறைவிடம். சீனாய் உடன்படிக்கைக்குப் பின் பொற்கன்றுக்குட்டியை வழிபடுவதன் வழியாக உடன்படிக்கையை முறிக்கின்றனர் இஸ்ரயேல் மக்கள். இஸ்ரயேல் மக்களுக்காகக் கடவுளிடம் முறையிட்ட மோசே மீண்டும் உடன்படிக்கையைப் புதுப்பிக்கிறார் (விப 32-34). இனி அவர்கள் வாக்களிக்கப்பட்ட நாட்டை நோக்கிப் பயணிக்கவேண்டும். இந்தச் சூழ்நிலையில்தான் ஆண்டவர் மோசேயிடம் மக்கள் கூட்டமைப்பிலுள்ள ஆண்களை எண்ணிக்கை எடுக்கச் சொல்கின்றார். கணக்கெடுப்பதற்காக ஆண்டவர் கொடுக்கின்ற அடையாளங்கள் இரண்டு உண்மைகளைக் கூறுகின்றன. முதலாவதாக அவர்களின் கூட்டமைப்பு ஒரு வழிபாட்டுக் கூட்டமைப்பு; கடவுளை மையமாகக் கொண்டு வாழுகின்ற கூட்டமைப்பு. இரண்டாவதாக, இஸ்ரயேல் மக்களின் கூட்டமைப்பு குடும்ப உறவுகளால் கட்டப்பட்ட ஒரு கூட்டமைப்பாகவும் உள்ளது. உதாரணமாக, மூதாதையர் வீடு, குலம் போன்ற பிரிவுகளைக் கொண்டதாக குடும்ப உறவுகள் இருந்தன. அவர்களில் போருக்குச் செல்லத்தக்க இருபதும் அதற்கு மேலும் வயதுடைய ஆண்களை மட்டும் கணக்கெடுப்பதற்கு ஆண்டவர் கட்டளையிடுகிறார்.

மோசேயும் ஆரோனும் இணைந்து கணக்கெடுப்புப் பணியைச் செய்யவேண்டும். இந்தப் பணியில் அவர்களுக்கு உதவி செய்வதற்காக ஒவ்வொரு குலத்திலிருந்தும் ஒரு மூதாதையர் வீட்டுத் தலைவனை அவர்கள் தேர்ந்தெடுக்கவேண்டும். உதவியாளர்களின் பெயர்ப்பட்டியலில் முதலில் லேயாவின் மகன்கள் மூத்தவன் தொடங்கி இளையவன் வரை வரிசையாக கொடுக்கப்பட்டுள்ளன. அதைத் தொடர்ந்து இராக்கேலின் மகன்களான யோசேப்பு மற்றும் பென்யமின் குலப்பெயர்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இறுதியாக, பில்கா மற்றும் சில்பாவுக்குப் பிறந்தவர்களின் பெயர்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. லேவியர் குலம் பதிவுசெய்யப்படவில்லை (எண் 1:47-54). ஆனால் யோசேப்பின் புதல்வர்களான எப்பிராயீம் மற்றும் மனாசேயின் பெயர்கள் தனித்தனியாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இதன் வழியாக இஸ்ரயேலில் பன்னிரெண்டு குலங்கள் உறுதிசெய்யப்படுகின்றன. பதிவு செய்யப்பட்டுள்ள பெயர்களைப் பார்க்கையில் ஓர் உண்மை தெரியவருகிறது. இந்தப் பெயர்களில் எந்தப் பெயரும் யாவே கடவுளின் பெயரைப் பிரதிபலிப்பதாக இல்லை. மாறாக, எல் மற்றும் சட்டாய் ஆகிய கடவுளின் பெயர்களைப் பிரதிபலிப்பதாக பல பெயர்கள் உள்ளன.

குலங்களின் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டபின் மோசேயும் ஆரோனும் கடவுளின் கட்டளையை நிறைவேற்றுகிறார்கள்.

ஒவ்வொரு குலங்களின் எண்ணிக்கையும் தனித்தனியாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு குலத்தின் எண்ணிக்கையும் பதிவுசெய்யப்படுகையில் ஒரே விதிமுறை பயன்படுத்தப்படுகிறது. ஆனால் முதல் இரண்டு குலங்களுக்கும் வித்தியாசமான சொற்றொடர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. உதாரணமாக, ரூபன் தலைப்பேறானவர் என அடையாளப்படுத்தப்படுகிறார். மேலும் ரூபன் மக்களின் குடும்பத்தினரும், சிமியோன் மக்களின் குடும்பத்தினரும் தலைக்கட்டு வாரியாகப் பதிவு செய்யப்படுகிறார்கள். குலங்களின் பெயர்களைக் குறிப்பிடும் வரிசையில் ஒரு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மோசேக்கும் ஆரோனுக்கும் உதவியாளர்களாக நியமிக்கப்பட்டவர்களைக் குறிப்பிடும்போது காத்து குலம் பத்தாவதாக வரிசைப்படுத்தப்படுகிறது. ஆனால் குலங்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுகையில் மூன்றாவதாக, சிமியோன் குலத்திற்கும் யூதா குலத்திற்கும் நடுவில், வரிசைப்படுத்தப்படுகிறது. முதல் கணக்கெடுப்பு இஸ்ரயேலை ஒரு பெரிய இனமாகவும், தேசமாகவும் வெளிப்படுத்துகிறது. இருபதும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்களும் போருக்குச் செல்லத் தக்கதுமானவர்களின் எண்ணிக்கை ஆறு இலட்சத்து மூவாயிரத்து ஐநூற்றைம்பது (எண் 1:46) எனக் கணக்கிடப்பட்டுள்ளது. ஐந்நூல்களை ஆதாரமாகக் கொண்டு பார்க்கையில் இந்த எண்ணிக்கை முதல் பெற்றோருக்கு கடவுள் கொடுத்த பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள் என்ற கட்டளையும் ஆசிரும் நிறைவுக்கு வந்திருக்கிறது எனக் கூறமுடிகிறது. இந்த எண்ணிக்கையைப் பார்க்கையில் கேள்விகளும் எழுகின்றன. போருக்குச் செல்லத்தக்க ஆண்களின் எண்ணிக்கை ஆறு இலட்சத்திற்கும் மேலாக இருந்தனர் என்பது உண்மையானால், பெண்கள், குழந்தைகள் அனைவரையும் கூட்டினால் குறைந்தது இருபது இலட்சம் போராவது இருக்கவேண்டும். இவ்வளவு பெரிய மக்கள் தொகை சீனாய் பாலைவனத்தில் வாழ்ந்திருக்க முடியுமா? அவர்களுக்குத் தேவையான உணவு, தண்ணீர் மற்றும் ஏனைய பொருள்கள் பாலைவனத்தில் அவர்களுக்கு கிடைத்திருக்குமா? என்பன போன்ற கேள்விகள் எழுகின்றன.

ஒரு சில அறிஞர்களின் கருத்துப்படி இந்த எண்ணிக்கை வேறு அர்த்தங்களைக் கொடுப்பதாகவும் இருக்கலாம். முதலாவதாக, எண்ணிக்கை பெரியதாக இருப்பதால் வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குள் நுழையும்போது இஸ்ரயேல் மக்கள் எந்த எதிர்ப்பையும் சந்திக்கமுடியும். அவர்கள் யாரைக் கண்டும் அஞ்சத்தேவையில்லை என்பதைக் குறிப்பிடுவதற்காக எண்ணிக்கை மிகைப்படுத்தப்பட்டு பதிவு செய்யப்பட்டிருக்கலாம். இரண்டாவதாக, தூயக வரியான அரைச் செக்கேல் வரி செலுத்துவதற்காக எடுக்கப்பட்ட கணக்கெடுப்பிலும் இதே எண்ணிக்கையில் ஆண்கள் இருப்பதை விப 38:26 கூறுகிறது: இருபது வயதும் அதற்கு மேலும் உள்ள ஆண்கள் எண்ணப்பட்டார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் கொடுக்க வேண்டியது தலைக்கு ஆறு கிராம் அதாவது தூயகச் செக்கேல் நிறைப்படி அரைச் செக்கேல். இத்தகைய ஆண்கள் ஆறு இலட்சத்து

மூவாயிரத்து ஐந்நூற்று ஐம்பது பேர் இருந்தனர் எனப் பார்க்கிறோம். மூன்றாவதாக, இந்த எண்ணிக்கை ஒரு குறியீடாகவும் இருக்கலாம். பண்டைய இஸ்ரயேலில் எண்களுக்கும் எழுத்துக்களுக்கும் ஒரே குறியீடுகள் பயன்படுத்தப்பட்டன. உதாரணமாக, எபிரேய மொழியின் முதல் எழுத்துதான் எண் ஒன்றிற்கும் பயன்படுத்தப்பட்டது. இரண்டாவது எழுத்து எண் இரண்டிற்கு குறியீடாகப் பயன்படுத்தப்பட்டது. இஸ்ரயேலின் மக்கள் என்றச் சொற்றொடரின் எபிரேய மொழிச் சொற்றொடர் *bene Israel* என்ற சொற்றொடரில் வருகின்ற எபிரேய எழுத்துக்களின் கூட்டுத்தொகை 603 ஆக உள்ளது. இதை ஆயிரத்தால் பெருக்கி வருகின்ற எண்ணிக்கை இஸ்ரயேலின் மக்கள் தொகையின் எண்ணிக்கை எனக் கணித்திருக்கலாம். இறுதியாக, பாபிலோனியர்களின் கணிதக் கோட்பாடுகள் 60 என்ற எண்ணை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்பட்டன. எண்ணிக்கை நூலின் இப்பகுதி பாபிலோனில் அகதிகளாக வாழ்ந்த காலத்தில் குருக்கள் மரபினரால் எழுதப்பட்டிருக்கலாம். இதனால் அவர்கள் பாபிலோனியக் கணிதக் கோட்பாடுகளால் தாக்கம் பெற்று பதிவு செய்திருக்கலாம். உண்மை எதுவாக இருந்தாலும் எகிப்து நாட்டில் இஸ்ரயேல் மக்கள் பலுகிப் பெருகினர்; எண்ணிக்கையில் வளர்ந்தனர் என்பதை அறிந்துகொள்வதற்கு இந்த எண்ணிக்கைகள் ஆதாரங்களாக உள்ளன. மேலும் அடிமைகளாக வாழ்ந்த மக்கள் பாலைவனத்தில் பயணிக்கும் வேளையில் இவ்வளவு எண்ணிக்கையில் இருப்பது கடவுளின் உடனிருப்பு அவர்களோடு உள்ளதையும் தெளிவாகக் காட்டுகிறது.

இந்தக் கணக்கெடுப்பில் லேவியர்கள் எண்ணப்படவில்லை. லேவியர்கள் கடவுளால் அவரது பணிக்காகத் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள். எனவே அவர்கள் போருக்குச் செல்ல வேண்டிய அவசியமில்லை. திருஉறைவிடம் மற்றும் வழிபாடுகள் சார்ந்த பணிகள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தன. உதாரணமாக, திருஉறைவிடத்திற்கும் திருஉறைவிடத்தைச் சார்ந்த அனைத்திற்கும் அவர்கள் பொறுப்பாளர்களாக இருந்தார்கள். பாலைவனப் பயணத்தின்போது அவர்கள் தங்கியிருக்கும் இடங்களில் திருஉறைவிடத்தை அமைப்பதற்கும், அங்கிருந்து புறப்படும்போது திருஉறைவிடத்தைப் பிரித்து அதைச் சுமந்து செல்வதற்கும் பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டிருந்தார்கள். மேலும் திருஉறைவிடத்தைப் பாதுகாப்பதற்கும் திருஉறைவிடத்தில் வழிபாடுகள் நடத்துவதற்கும் அவர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். லேவியர்களைத் தவிர வேறு யாரும் திருஉறைவிடத்திற்குள் செல்லமுடியாது. திருஉறைவிடத்திற்குள் நுழைய முயல்பவர்கள் கொல்லப்படுவார்கள். எண் 3 வது பிரிவில் லேவியர்களின் எண்ணிக்கை எடுக்கப்படுவதாக வாசிக்கிறோம். ஆண்டவர் மோசேக்கு மோசேக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் அவர்கள் செய்தனர் என்ற செய்தியுடன் முதல் பிரிவு நிறைவுக்கு வருகிறது. எண்ணிக்கை நூலின் முதல் பிரிவு நேர்மறை எண்ணங்களால் நிறைந்துள்ளது. பொற்கன்றுக்குட்டி நிகழ்வு ஏற்படுத்திய விளைவுகள் சீனாய் பாலைவனத்தில் செய்யப்பட்ட உடன்படிக்கைப் புதுப்பித்தலின் வழியாகச்

சரிசெய்யப்பட்டுவிட்டன. லேவியர்கள் குருக்களாக நியமிக்கப்படுவதும் இநத நேர்மறை எண்ணங்களுக்கு ஒரு காரணமாக உள்ளது (விப 34 லேவி 27) எனலாம்.

பயணம் தொடரும்,

அருட்பணி ஆ. அலெக்ஸ்.cmf



# ஞாயிறு மறையுரை




அருட்பணி.ராபர்ட்
உதவிப் பங்குத்தந்தை, புனித.விண்ணரசி அன்னை ஆலயம்,மேற்கு மரியநாதபுரம், திண்டுக்கல் மறைமாவட்டம்


## பாஸ்கா காலம் 4ம் வாரம் – ஞாயிறு

## 30.04.2023

திருத்தூதர் பணிகள் 2/14, 36-41 - 1 பேதுரு 2/20-25 - யோவான் 10/1-10

கார்ல் மார்க்ஸ் கடந்த நூற்றாண்டின் மாமேதை. உலகத்தின் சிந்தனைப் போக்கை மாற்றியமைத்தவர். மூலதனம் என்ற புத்தகத்தை எழுதியவர். உலகத்தின் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட நூல்.ஆனால் வாழ்வு முழுவதும் வறுமை வாட்டியெடுத்தது. அவருடைய குழந்தை பிறந்தபோது அவர்களிடத்தில் தொட்டில் இல்லை. அந்த குழந்தை இறந்தபோதும் அவளை வைக்க சவப்பெட்டி இல்லை. வறுமையில் வாடிய மார்க்ஸ் தன்னையும் தனது குடும்பத்தையும் காப்பாற்ற தனது நண்பர் எங்கெல்ஸிடம் பணம் கேட்டார். ஒருமுறை எங்கெல்ஸ் எழுதுவார் எனது தந்தை இறந்துவிட்டார். ஆயினும் உனக்கு உதவி செய்தல் என்பது எனது கடமை. ஆகவே உதவுகிறேன் என்று. எங்கெல்ஸ் குறிப்பிட்டது உண்மையே. இந்த உலகம் காரல் மார்க்ஸ்க்கு ஏதும் தரவில்லை ஆனால் மார்க்ஸ் இந்த உலகத்திற்கு தந்தது தனி வழி. அவர்காட்டிய அந்த தனிவழியில் பயணித்த உழைப்பாளிகள் தங்களுக்கான வழியை கண்டுபிடித்துக்கொண்டார்கள்.


பாஸ்கா காலத்தின் 5ம் வாரத்தில் அடியெடுத்து வைக்கக்கூடிய நம்மை நானே வழி என அவரின் வழியைப் பின்பற்ற இயேசு நமக்கு அழைப்பு விடுக்கின்றார். வழி என்ற சொல் விவிலியத்தில் பல இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அது மக்களின் வாழ்வு நெறிகளை பழக்க வழக்கங்களை ஒழுக்க நெறிகளைக் குறிப்பிடக்கூடியதாக அமைந்திருக்கிறது. ஆனால் இச்சொல்லின் நேரடி அர்த்தம் பயணிக்கும் திசையை அல்லது செல்லும் இலக்கை குறிக்கவே பயன்படுத்தப்படுகிறது. பழைய ஏற்பாட்டில் பயன்படுத்தக்கூடிய வழி என்பது விடுதலை பயணத்தைச் சுட்டிக்காட்டுவதாக அமைகிறது. இந்த பாதையானது இறைவனால் தேர்வு செய்யப்பட்டதாக இருக்கிறது. பழைய

ஏற்பாட்டின் படி வழி என்பது கடவுளுடையது.மனிதன் முடிவு செய்யக்கூடிய ஒன்றல்ல. அவ்வழியில் இறைவனின் பராமரிப்பும் பாதுகாப்பும் இருக்கும். ஆனால் பல நேரங்களில் பலர் இறைவழியைப் பின்பற்றாமல் தவறான வழியைப் பின்பற்றி அழிவுக்குட்படுகின்றனர். அழிவிலிருந்து மக்களை மீட்க இறைவாக்கினர்களை இறைவன் பயன்படுத்துவதையும் பல்வேறு மீட்பு திட்டங்களையும் நாம் விவிலியத்தில் காண்கின்றோம்.

இன்றைய நற்செய்தியிலும் இறைமகன் இயேசு கிறிஸ்து நானே வழி என்கின்றார். இவ்வுலகில் வாழக்கூடிய அனைவரும் ஏதோ ஒரு வழியில் பயணிக்கின்றனர். பெரும்பாலனவர்கள் பின்பற்றும் வழிகள் தவறான வழிகளாகவே முடிகின்றன. ஒரு சிலரே சிறந்த வழிகளை அடையாளம் காண்கின்றனர். அவ்வழிகளில் தீரமாய் வீறு நடைபோடுகின்றனர். தான் நடந்த வெற்றிப் பாதையில் பிறரும் நடக்க இயேசு இன்றைய நாளில் வழிகாட்டுகின்றார். அந்த இயேசுவின் வழி நிறைவைத்தரக்கூடிய வழியாக முழுமையின் வழியாக இறைத்தந்தையினை அடையக்கூடிய வழியாக இருக்கிறது என்பதற்கான சாட்சி தான் இன்றைய நற்செய்தி வாசகம். திருமுழுக்கு யோவான் ஆண்டவராகிய இயேசுவின் வழியை ஆயத்தம் செய்கிறார். இயேசு தந்தையின் வழியை போதிக்கிறார். பாடுகளின் போது சிலுவையின் வழியே அவரது வழி என்கின்றார். அகலமான பாதை அழிவுக்கு இட்டுச்செல்லும். ஆனால் இடுக்கான வழி வாழ்விற்கு அழைத்துச் செல்லும் என்கிறார். தன்னுடைய வாழ்வில் தனக்கான வழி என்ன என்பதை நன்கு அறிந்து வைத்ததன் காரணமாக பிறருக்கான வழியைக்காட்ட கூடியவராக வழிகாட்டியாக இருக்கின்றார்.

இன்றைய முதல்வாசகத்தில் பார்க்கின்றோம். பந்தியில் உணவை மையமாக வைத்து முணுமுணுக்கும் போது சீடர்கள் தங்களுடைய வழி என்ன என்பதை உணர்ந்திருந்ததன் காரணமாக பரிமாறும் பணியை பிறருக்கு கொடுத்துவிட்டு இறைவார்த்தையைக் கற்பிக்கும் பணியைத் தேர்ந்தெடுக்கின்றனர். இரண்டாம் வாசகத்தில் புனித பேதுரு இருளின் வழிக்கு அல்ல் ஒளிக்கு அழைத்துள்ளவரின் வழியை அறிந்து கொள்ள பணிக்கின்றார். இவையனைத்தும் திருத்தூதர்கள் இயேசுவிடமிருந்து கற்றுக்கொண்ட வழிகளாக பார்க்கப்படுகின்றது. தன்னோடு இருந்த சீடர்களாகிய தோமா மற்றும் பிலிப்பு இயேசுவை அறிந்து கொள்ளவில்லை. எனவே தான் என் சொற்களின் பொருட்டு அல்ல என்னுடைய செயல்களின் பொருட்டாவது நம்புங்கள் என்கின்றார். எத்தனை இடர்பாடுகள் துன்பங்கள் வந்தாலும் தன் வழியில் உறுதியுடன் இருந்த ஒரே காரணத்தினால் தன்னை நம்பி வந்த தொழிலாளர்களுக்கு வழிகாட்டக்கூடிய தெளிவு கார்ல் மார்க்ஸிடமிருந்தது. நாமும் நம்முடைய வாழ்வில் இயேசுவின் வழிகளில் நடக்கும்போது திடம் பெறமுடியும் பிறர் திடம் பெற உழைத்திட முடியும். தனி வழிகளில் தடம் பதிக்கமுடியும்.

முயல்வோம்.....தனிவழியில்.



# பாஸ்கா காலம் ஐந்தாம் ஞாயிறு

தி.ப. 6:1-7, 1 பேது. 2:4-9, யோ. 14:1-12



பா. சேவியர்
திண்டுக்கல்

07-05-2023

## திருப்பலி முன்னுரை

இறைவனது உரிமை சொத்தான அன்பு இறைமக்களே உங்கள் அனைவரையும் இன்றைய பாஸ்கா காலத்தின் ஐந்தாம் ஞாயிறு வழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

இன்றைய வழிபாடு கடவுளிடம் நம்பிக்கை கொள்ளுங்கள் என்ற கருத்தை மையமாகக் கொண்டுள்ளது. இன்றைய வழிபாட்டின் வழியாக நான் என்ற அகம்பாவச் சொல்லை ஆழமான நம்பிக்கையின் குறியீடாக மாற்றுகிறார் இறைமகன் இயேசு.

வாழ்க்கையில் எதுவரினும் மனந்தளராமல் பயணிக்கும் போது கடவுள் நம்மைவழி நடத்துவார். அவரால் ஆகாதது ஏதுமில்லை, அவர் மீது நம்பிக்கை கொண்டோர்க்கு எல்லாம் கூடும் என்ற நம்பிக்கை விதைகளை நம் நெஞ்சங்களில் விதைக்கிறது இன்றைய வார்த்தை வழிபாடு.

பாதை என்ற ஒன்று இருந்தால் தான் ஒருவன் அதில் நடக்க முடியும். உண்மை என்ற ஒன்று இருந்தால்தான் ஒருவன் எதையும் அறிய முடியும். வாழ்வென்ற ஒன்று இருந்தால் தான் ஒருவன் வாழ முடியும். வழி, உண்மை, வாழ்வு இம்மூன்றின் சங்கமமாய் காட்சி தருபவர் இறைமகன் இயேசு ஒருவர்தான்.

கிறிஸ்து ஒருவரால்தான் விண்ணகத்திற்கு வழிகாட்ட முடியும். ஏனெனில் அவர் ஒருவரே விண்ணகத்திலிருந்து மண்ணகத்திற்கு வந்தவர், வழியாய் அவர் இருப்பதால் உண்மைக்கு அழைத்து செல்கிறார். உண்மையாய் அவர் இருப்பதால் வாழ்வுக்கு அழைத்து செல்கிறார். இதை நம்புவோர்க்கு அவர் மூலைக்கல், நம்பாதோர்க்கு அவர் தடைக்கல்.

வழியும், உண்மையும், வாழ்வுமான இறைமகன் இயேசுவை நம்பிக்கையுடன் ஏற்றுக்கொண்டு, அவரது உரிமை சொத்தாக மாறும் வரம் வேண்டி இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

## முதல் வாசக முன்னுரை

ஆதிகால கிறிஸ்தவர்களிடையே இருந்த பிரிவினையை நிவர்த்தி செய்ய பன்னிரு திருத்தூதர்கள் இறைஞானம் நிறைந்த ஏழு திருத்தொண்டர்களை நியமிக்கின்ற நிகழ்வு இன்றைய முதல் வாசகமாக வழங்கப்பட்டுள்ளது. இன்றைய திருச்சபையில் திருத்தொண்டர்களின் நியமனத்திற்கு வழிவகுத்த இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

துன்புறும் கிறிஸ்துவ திருச்சபைக்காக தூய பேதுரு எழுதிய முதல் திருமடலே இன்றைய இரண்டாம் வாசகம். கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் நாம். அவருடைய உரிமைசொத்து நாம் என்ற நம்பிக்கையை ஊட்டி, வியத்தகு ஒளிக்கு நம்மை அழைத்து வந்தவரின் மேன்மைகளை பறைசாற்றும் இவ்வாசகத்திற்கு கவனமுடன் செவி சாய்ப்போம்.


## மன்றாட்டுகள்

1) நம்பிக்கையின் நாயகனே இறைவா, இறைப் பணியிலும், பிறரன்புப் பணியிலும் நாளும் தங்களையே கரைத்துக்கொண்டு வாழும் எம் திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர்கள் அனைவரும் இறை நம்பிக்கையோடும், தன்னம்பிக்கையோடும் செயல்பட அருள் தாரும். மக்களை இருளினின்று உமது வியத்தகு ஒளிக்கு அழைத்து வரும் மேன்மை மிக்க பணிகள் ஆற்றும் அவர்கள் தங்களது அருட்பணியில் என்றும் மூலைக்கல்லாய் இருந்திட அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2) வழியாகவும் வாழ்வாகவும் உண்மையாகவும் விளங்குகின்ற அன்பு இறைவா, உம் திருமகன் கிறிஸ்து எங்களுக்குக் காட்டிய வழி அன்பின் வழி, தியாகத்தின் வழி, மன்னிப்பின் வழி, தாழ்ச்சியின் வழி, பணிவிடை புரியும் வழி, அதுவே விண்ணகத்திற்கு இட்டுச் செல்லும் வழி என்பதை முழுமையாக உணர்ந்து தெளிந்து அவ்வழியே பயணித்து நிலைவாழ்வைப் பெற வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3) இருக்கின்றவராக இருக்கின்ற அன்பு இறைவா, எம் பிள்ளைகள் பள்ளிப் படிப்பை வெற்றிகரமாக முடித்துவிட்டு கல்லூரிப் படிப்பை தொடங்கும் நிலையிலும், கல்லூரிப் படிப்பை முடித்தவர்கள் தங்கள் வாழ்வை தீர்மானிக்கும் பணியினை மேற்கொள்ளும் நிலையிலும் காத்திருக்கிறார்கள். இந்த நேரத்தில் உமது வழியும், உண்மையும், வாழ்வும் நானே என்ற வார்த்தைகள் ஒளிமயமான உண்மையான வாழ்வுக்கு அவர்களை அழைத்துச் செல்ல உதவ வேண்டுமென இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4) உலர்ந்த எலும்புகளுக்கு உயிர் அளித்து புதுவாழ்வு தந்த தந்தையே இறைவா, எம் பங்கில் உள்ள குழந்தைகளை நிறைவாக ஆசீர்வதியும். கோடைகால சிறப்பு மறைக்கல்வி வகுப்புகளை அவர்கள் ஆர்வமுடன் பயன்படுத்தி தாங்கள் கற்ற மறைப் போதனைகளை வாழ்வாக்கிடவும், அதனையே வாழ்வின் வரிச்சட்டமாக கொண்டாடிடவும் அருள் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.





திருமதி.மார்க்ரேட் பாண்டியன்
கவுண்டம்பாளையம்,கோவை

# பொன் மொழிகள் காட்டும் வாழ்வின் வழி

பயந்து சாவதைவிட
துணிச்சலே துயரம் போக்கும் –ஆல்பர்ட் கமு

நன்மை செய்து பழக்கப்பட்டவர்கள்
தீமை செய்ய நினைத்தாலும்
அவர்களால் செய்ய முடியாது

நாம் எதிர் கொள்ளாதவரை நம் எதிரில் இருப்பது பலம் பெறும்
நாம் எதிர் கொள்ள ஆரம்பித்தால் அது பலவீனமாயிடும்

தேவையில்லாதவரிடமும், தகுதியற்றவரிடமும்
நாம் யார் என்பதை நிரூபிக்காமல் இருப்பதே புத்திசாலித்தனம்

ஏமாளிகள் முட்டாள்கள் அல்ல
எல்லோரும் தங்களைப்போல் நல்லவர்கள் என்று நினைக்கின்றார்கள்

பொய்யை நம்புவதும்
உண்மையை ஏற்க மறுப்பதும்
முட்டாள்தனத்தின் இருபக்கங்கள்
–சோரன் கெர்கேகார்ட்

முதலில் தாங்க முடியாததாகத் தோன்றும்,
பின் பரவாயில்லைபோலத் தோன்றும்
அடுத்து…கடந்துவிட முடியும் என்ற நம்பிக்கை வரும்
இறுதியாக இதற்காகவா வருந்தினோம் என்ற மனம் லேசாகிவிடும்
நமக்கு வேண்டியதென்னவோ கொஞ்சம் பொறுமையும்,
வலியைத் தாங்கும் வலிமையும்தான்



# திருப்பலி வாசகங்கள்

## பாஸ்கா 5ம் வாரம்

## 07.05.2023 முதல் 14.05.2023

**07.05.2023 - பாஸ்கா 5ம் வாரம் - ஞாயிறு**

திருத்தூதர் பணிகள் 6/1-7

1 பேதுரு 2/4-9

யோவான் 14/1-12

**08.05.2023 - பாஸ்கா 5ம் வாரம் - திங்கள்**

திருத்தூதர் பணிகள் 14/5-18

யோவான் 14/21-26

**09.05.2023 - பாஸ்கா 5ம் வாரம் - செவ்வாய்**

திருத்தூதர் பணிகள் 14/19-28

யோவான் 14/27-31

**10.05.2023 - பாஸ்கா 5ம் வாரம் - புதன்**

திருத்தூதர் பணிகள் 15/1-6

யோவான் 15/1-8

**11.05.2023 - பாஸ்கா 5ம் வாரம் - வியாழன்**

திருத்தூதர் பணிகள் 15/7-21

யோவான் 15/9-11

**12.05.2023 - பாஸ்கா 5ம் வாரம் - வெள்ளி**

திருத்தூதர் பணிகள் 15/22-31

யோவான் 15/12-17

**13.05.2023 - பாஸ்கா 5ம் வாரம் - சனி**

திருத்தூதர் பணிகள் 16/1-10

யோவான் 15/18-21

**14.05.2023 - பாஸ்கா 6ம் வாரம் - ஞாயிறு**

திருத்தூதர் பணிகள் 8/5-8, 14-17

1 பேதுரு 3/15-18

யோவான் 14/15-21



# திருக்குறள் வழங்கும் சமூக நெறி

## குறள் 44

பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல



### குறள் விளக்கம்

பொருள்சேர்க்கும் பொது பழிக்கு அஞ்சிச் சேர்த்து, செலவு செய்யும் போது பகுத்து உண்பதை மேற்கொண்டால், அவ்வாழ்க்கையின் ஒழுங்கு எப்போதும் குறைவதில்லை.

### சிந்தனை

பணக்கார இளைஞனின் விலையுயர்ந்த கார் நின்று கொண்டிருந்தது. ஏழைச் சிறுவன் ஒருவன் எட்டி நின்று அந்தக் காரையே ஆசையுடன் பார்த்துக் கொண்டிருந்தான். சிரித்துக் கொண்டே அந்த இளைஞன் சொன்னார், இது என் அண்ணன் எனக்குப் பரிசளித்தது. சிறுவன் முகத்தில் வியப்பு. உனக்கு அப்படி ஓர் அண்ணன் இருந்திருக்கலாம் என்று ஆசைப்படுகிறாயா? இளைஞர் கேட்டார். சிறுவன் சொன்னான், இல்லை! அப்படியோர் அண்ணனாக வளர வேண்டும் என்றான்.

எப்படியாவது பணம் சம்பாதித்துவிட வேண்டும் அது குறுக்கு வழியோ, தவறான வழியோ அதைப்பற்றி கவலைப்படாமல் பணம் சேர்த்து விட வேண்டும். சேர்த்த பணத்தை தனக்கும் தன்னுடைய சந்ததிக்கும் வைத்துக் கொள்ள வேண்டும் என்று நினைக்கின்ற இந்த சமுதாயத்திற்கு வள்ளுவர் சொல்கிறார்: நேரிய வழியில் பணம் சேர்த்து அதை பிறரோடு பகிர்ந்து உண்ணுகிறவன் அவனுடைய வாழ்க்கை மட்டுமல்ல அவனுடைய சந்ததியர்களும் எத்தகைய அச்சமும் இல்லாமல் மகிழ்ச்சியோடு வாழ்வார்கள் என்கிறார்.

வேதாகமத்தில் நல்ல சமாரியன், வழிப்பறியில் காயப்பட்டவரை அணுகி, காயங்களில் திராட்சை மதுவும், எண்ணெயும் வார்த்து, அவற்றைக் கட்டி, தாம் பயணம் செய்த விலங்கின் மீது ஏற்றி, ஒரு சாவடிக்குக் கொண்டுபோய் அவரை கவனித்துக் கொண்டார். மறுநாள் இருதெனாரியத்தை எடுத்து, சாவடிப் பொறுப்பாளரிடம் கொடுத்து இவரை கவனித்துக் கொள்ளும், இதற்கு மேல் செலவானால் நான் திரும்பி வரும்போது உமக்குத் தருவேன் என்றார். இவ்வாறு தான் சம்பாதித்த பணத்தை பாதிக்கப்பட்டவருடைய நலனுக்காக பகிர்ந்து கொள்கிறான் என்று இயேசு தன்னிடம் கேள்வி கேட்டவருக்கு பதிலாக தருகிறார். நீரும் போய் அவ்வாறே செய்யும் என்று அறிவுரையும் கூறுகிறார்.

நேரிய வழியில் பணம் சம்பாதிக்க வேண்டும். சம்பாதித்த பணத்தை பிறரோடு பகிர வேண்டும் என்பது தான் இல்வாழ்க்கையின் தர்மம் என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

எனவே செல்வம் சேர்ப்போம். சேர்த்த பணத்தை தேவையில் இருப்போருடன் பகிர்வோம்.



அருட்சகோதரி.ஜெஸிந்தா ஜான்சன்.fspm



திரு.ஜெ.அம்புரோஸ்
கோபிச்செட்டிபாளையம்

# நலம் தரும் இயற்கை வளம்



நலம் தரும் இயற்கை வளம்.
உறவுகளே இனிய வணக்கம்.
இன்றைய நலக் கல்வி
கொத்தமல்லி சாற்றின் ஆரோக்கிய நன்மைகள் !!
கொத்தமல்லி தழையில்
விட்டமின் ஏ, பிஇ சி உயிர் சத்துக்களும்
சுண்ணாம்பு சத்தும்,
இரும்புச்சத்தும் உள்ளன.
மனித்தனின் உடலை வலுவாக்கும் அனைத்து
சத்துக்களும் இதில் உள்ளது.
இது வாயு பிரச்சினையை குணமாக்கும்.
நாட்டு கொத்துமல்லி இலை – கால் கட்டு,
தேங்காய் – 1,
நாட்டு சர்க்கரை – தேவையான அளவு.
சுத்தம் செய்த கொத்துமல்லி இலையுடன்
தேங்காய் சேர்த்து அரைத்து வடிகட்டவும்.
இதன் கூட தேவையான அளவு தண்ணீர்,
நாட்டு சர்க்கரை கலந்து பருகலாம்.
இதைத் தொடர்ந்து பருகுவதால்

காமாலை, கேன்சர் போன்ற மிகக் கொடிய நோய்கள் அனைத்தும் குணமாகும்.
உடலில் உள்ள கழிவுகள் அனைத்தையும் வெளியேற்றும்.
வயிறு சம்பந்தபட்ட அனைத்து பிரச்சினைகளையும் குணமாக்கும்.
கல்லீரலை பலப்படுத்தும்.
பித்தம் கட்டுக்குள் இருக்கும்.
இதை தயார் செய்வது மிகவும் எளிதானது. இதை அனைவரும் பருகலாம்.
தினமும் தண்ணீர்க்கு, டீ, காபிக்கு பதில் இதை அருந்தலாம்.
கொத்தமல்லிக்கு பதில் கருவேப்பிலையும், புதினாவையும் இதே போன்று சாறு தயார் செய்து உபயோக்கிலாம்
ஆனால் கொத்தமல்லி சாறு தான் சிறந்தது.
வெறும் கொத்துமல்லி இலைச்சாறுடன் எலுமிச்சை சாறு, உப்பும், மிளகு தூளும் சேர்த்து அருந்தலாம்.
கொத்துமல்லி இலைச்சாறுடன், பசும்மோர், உப்பும் கலந்தும் அருந்தலாம்.
கொத்துமல்லி இலைச்சாறு அருந்தும் நாள் அன்று பசிக்கும் போது மட்டுமே சாப்பிட வேண்டும்.
குறிப்பு: இந்த சாற்றினை கண்டிப்பாக அடுப்பில் வைக்க கூடாது.

நன்றி எம் உறவுகளே..!
என்றும் உங்கள் அன்பு சகோதரன்.

ஜே. அன்புரோஸ்.
நலநெறியாளன்
9360456063